முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி

நாள்: 24.10.2025, அ.வ.எண்.63/2023, வா.சா.3. வசந்தாமணி, க/பெ. வரதராஜன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் உள்ள சங்கதிகள் எனக்கு எப்போது தெரியும் என்றால் 10 வருடத்திற்கு முன்பு தெரியும். எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கு யார் யார் மீது போட்டுள்ளார்கள் என்றால் தெய்வஜோதி ஆனந்த ஜோதி மீது தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் தங்கைக்கு சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தெய்வஜோதியின் தகப்பனார் பெயர் காளியப்ப கவுண்டர் என்றால் சரிதான். காளியப்ப கவுண்டரின் அப்பா பெயரும் காளியப்ப கவுண்டர் என்றால் சரிதான். அப்பா காளியப்ப கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 ஆண் மக்கள். 2 பெண் மக்கள் ஆவார்கள். காளியப்ப கவுண்டர் இறந்த பின்னிட்டு அவரது 5 வாரிசுகளும் தான் அவரது சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2) காளியப்ப கவுண்டரின் மகன் கோபால் சாமி என்பவருக்கு அவர் தகப்பனார் சொத்தில் 1/5 பாகம் இருந்தது என்றால் சரிதான். 1/5 சொத்துக்களை ராசாத்தி என்பவர் கிரயம் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். ராசாத்தியிடமிருந்து நான் கிரயம் வாங்கிவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி 1/5 சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் தற்போது இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல நான் தான் ஓட்டிவந்தேன் தற்போது பயிரிடாமல் காலிநிலமாக உள்ளது. மேற்படி சொத்துக்கள் பாகம் பிரிபடாத பொதுச்சொத்துக்கள் என்றால் அந்த சொத்துக்களில் பாகம் கோரி கோவை 3 ம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 749/2019 நான்

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.

வாதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அ,வ.எண். 749/2019 ல் 1, 2 பிரதிவாதிகள், மற்றும் வாதியும் தரப்பினராக உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதி ஆனந்தஜோதி வழக்கறிஞர் வைத்து மேற்படி வழக்கில் வழக்கை நடத்தவில்லை என்றால் சரிதான்.

3) மேற்படி வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் வைத்து நான் வாங்கிய கிரயம் செல்லாது என வழக்காடி வருகிறார்கள் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய சொத்தை பொறுத்து காளியப்ப கவுண்டரின் மகள் துளசியம்மாள் 2 ம் பிரதிவாதி தெய்வஜோதிக்கு ஒரு உயில் எழுதிவைத்து அந்த உயிலை பொறுத்து பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் தெய்வஜோதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சார்பு நீதிமன்ற வழக்கு அ.வ.எண் 116/2017 வழக்கில் ஆனந்தஜோதி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அ.வ.எண் 116/2017 வழக்கில் காளியப்ப கவுண்டரின் வாரிசு அல்ல என்பதால் தான் ஆனந்தஜோதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4) ஆனந்த ஜோதி காளியப்ப கவுண்டருக்கு வாரிசு இல்லை என்றும் எனக்கு ஆதரவாக அ. வ. எண். 749/2019 ல் அவரை தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் ஆனந்த ஜோதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகாமல் எனக்கு ஆதரவாக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அ. வ. எண். 749/2019 ல் ஆனந்தஜோதி எனக்கு ஆதரவாக இருப்பதால் இந்த வழக்கில் நான் ஆனந்தஜோதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

**<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) வாதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்என்றால் ஆனந்தஜோதி காளியப்பனின் வாரிசு என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணைவந்ததா என்றால் இல்லை. சாட்சியம் அளிக்க யார் என்னை அழைத்து வந்தது என்றால் ஆனந்தஜோதி அழைத்து நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு என்ன வயது என்றால் 76 வயது ஆகும். காளியப்ப கவுண்டரின் உறவுகள் விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் தெய்வஜோதி என்மீது வழக்கு போட்டுள்ளார்கள் அதனால் அவர்களது உறவு முறை பற்றி தெரியும்.

2) நான் பிறந்தது முதல் சொக்கனூரில் வசித்து வருகிறேனா என்றால் திருமணம் செய்தது சொக்கனூர் கிராமம் ஆகும். எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் சரியாக ஞாபகமில்லை. காளியப்ப கவுண்டரின் குடும்ப விவரம் நேரடியாக தெரியாது என்றால் தெரியும். அவர் பக்கத்து தோட்டத்துக்காரர் தான். காளியப்ப கவுண்டர் இறந்த தேதி தெரியுமா என்றால் 1968 ம் ஆண்டு ஆகும். தேதி குறிப்பிட்டு எனக்கு ஞாபகமில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் தேதி மாதம் வருடம் குறிப்பிட்டிருந்தால் தவறு என்றால் சரியல்ல.

3) எனது முதல் விசாரணையில் உள்ள விவரங்கள் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். ஆனந்தஜோதி பிறந்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. காளியப்ப கவுண்டரின் குடும்ப விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றும் பிரதிவாதிகளோடு எனக்கு பிரச்சனை இருப்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3 ,4 பிரதிவாதிகள் மேற்கொண்ட

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.

விசாரணையின் பேரில் ஆனந்த ஜோதி 1970 ம் ஆண்டு பிறந்துள்ளார் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.